இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இதோ! முன்பு எழுந்த விண்மீன் தோன்றி குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும்வரை அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது. அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். வீட்டிற்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள்; நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள்; தங்கள் பேழைகளைத் திறந்து, பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். (மத்தேயு 2:9-11)

# திருத்தந்தையின் 'ஊர்பி எத் ஓர்பி' செய்தி 25.12.23



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் டிசம்பர் 25 திங்கள்கிழமை நண்பகல், உரோம் நகரின் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தின் மேல் மாடத்தில் தோன்றி தன் 'ஊர்பி எத் ஓர்பி' செய்தியை வழங்கினார்.

கிறிஸ்து பிறப்பு பெருவிழா மற்றும் உயிர்ப்பு பெருவிழா எனும் இரண்டு சிறப்பு பெருவிழாக்களில் மட்டுமே திருத் தந்தையால் வழங்கப்படும் 'ஊர்பி எத் ஓர்பி' எனப்படும், உரோம் நகருக்கும் உலகுக்கும் ஆன சிறப்புச் செய்தியை டிசம்பர் 25 திங்கள்கிழமை வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலின் மேல்மாடத்தில் இருந்து வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## திருத்தந்தையின் ஊர்பி எத் ஓர்பி செய்தி

அன்பான சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்! உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களின் பார்வையும் இதயமும் இயேசு பிறந்த பெத்லகேமின் பக்கம் திரும்பியுள்ளன. இந்த நாள்களில் வலியும் நிசப்தமும் ஆட்சி செய்யும் இடத்தில்தான், பல நூற்றாண்டுகளாக எதிர்பார்த்திருந்த மக்களுக்கு "இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் (லூக் 2:11) என்ற அறிவிப்பு ஒலித்தது. பெத்லகேமில் வானதூதர்கள் கூறிய அதே வார்த்தைகள், இன்று நமக்கும் எடுத்துரைக்கப்படுகின்றன. கடவுள் நமக்காகப் பிறந்துள்ளார் என்பதை அறியவும், எல்லையற்ற கடவுளின் முடிவில்லா வார்த்தையையும், அவர் நம்மத்தியில் உள்ளார் என்ற நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் நமக்குள் நிறைக்கின்றன. வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார் (யோவான் 1:14) என்ற இறைவார்த்தைகள் வரலாற்றின் போக்கை மாற்றும் செய்தியாக உள்ளன.

பெத்லகேமில் அறிவிக்கப்பட்ட நற்செய்தி யானது பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி யாகும் (லூக் 2:10). என்ன மகிழ்ச்சி? உலகின் மகிழ்ச்சியோ, கேளிக்கையின் மகிழ்ச்சியோ அல்ல மாறாக நம்மைப் பெரியவர்களாக்கும் ஒரு "பெரிய" மகிழ்ச்சி. நம் சகோதரராகிய இயேசு அவரது தந்தையை நமது தந்தையாக நம் எல்லாருக்கும் கொடுக்க எளிய குழந் தையாக வந்தார். கடவுளின் மென்மையை நமக்கு வெளிப்படுத்துகிறார். எல்லாவற் றிற்கும் மேலாக இறைத்தந்தையின் ஒரே பேரான அவர், கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை நமக்கு அளித்தார் (யோவான் 1:12). இதயத்தை ஆறுதல் படுத்துகின்ற, நம்பிக்கையைப் புதுப்பித்து, அமைதியைத் தருகின்ற மகிழ்ச்சி இங்கே உள்ளது: இது தூய ஆவியின் மகிழ்ச்சி, அன்பான குழந்தைகளாக நாம் இருப்பதற்கான மகிழ்ச்சி.

சகோதர சகோதரிகளே, இன்று பெத்ல கேமில் பூமியின் இருளில் இந்த அணையாத சுடர் ஏற்றப்பட்டது, உலகின் இருளில் மேலோங்கும் கடவுளின் ஒளி, அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது. (யோவான் 1.9) இந்த அருளில் மகிழ்வோம்! நம்பிக்கையையும் உறுதியையும் இழந்தவர்களே, மகிழ்ச்சியாயிருங்கள், ஏனென்றால் நீங்கள் தனியாக இல்லை. கிறிஸ்து உங்களுக்காக பிறந்துள்ளார். எதிர்நோக்கைக் கைவிட்டுவிட்டவர்களே, மகிழ்ச்சியடையுங்கள், ஏனென்றால் கடவுள் உங்களுக்காக தம் கரங்களை நீட்டு கின்றார். விரல்களை அல்ல. பயத்திலிருந்து உங்களை விடுவிக்கவும், இடர்ப்பாடு களிலிருந்து மீட்கவும், சிறு குழந்தையான இயேசு தனது கைகளையும் கண்களையும் உங்களுக்குக் காட்டுகின்றார். உங்கள் இதயத்தில் அமைதியைக் காண முடியவில்லை என்றாலும் மகிழ்ச்சியாக இருங்கள் ஏனென்றால் உங்களுக்காக எசாயாவின் இறைவாக்கு நிறைவேறி யுள்ளது. ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சிப்பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ 'வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்' அவருடைய "அமைதிக்கு முடிவே இராது" (9.6) என்கிறார் இறைவாக்கினர் எசாயா.

அமைதியின் இளவரசரை முன்னறிவித்த எசாயா, அவர் வேற்றினத்தாரிடையே உள்ள வழக்குகளைத் தீர்த்து வைப்பார்; பல இன மக்களுக்கும் தீர்ப்பளிப்பார் அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள் வார்கள், ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது; அவர்கள் இனி ஒருபோதும் போர்ப்பயிற்சி பெற மாட்டார்கள் என்று கூறுகின்றார். கடவுளின் உதவியால், அந்த நாள் நெருங்கி வரும் வகையில் செயல்படுவோம்.

போரினால் மக்களின் வாழ்க்கை பாதிப்புக் குள்ளாகும் இஸ்ரயேல் மற்றும் பாலஸ் தீனத்தை நினைவுகூர்கின்றேன். அனை வரையும், குறிப்பாக காசாவின் கிறிஸ்தவ சமூகங்கள், மறைப்பணித்தளங்கள் மற்றும் முழு புனித பூமியையும் அரவணைத்து நினைவுகூர்கின்றேன். கடந்த அக்டோபர் 7 ஆம் தேதி நடந்த கொடூரமான தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தை என் இதயத்தில் உணர்கின்றேன். பிணையக் கைதிகளாக உள்ளவர்களை விடுவிக்க மீண்டும் எனது வேண்டுகோளை உறுதியாக புதுப்பிக்கிறேன். பாதிக்கப்பட்ட அப்பாவி பொதுமக்களை அச்சமூட்டும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். வன்முறை மற்றும் வெறுப் புணர்வைத் தூண்டுவதைத் தொடராமல், வலுவான அரசியல் விருப்பத்தாலும், பன்னாட்டு சமூகத்தின் ஆதரவுடனும் கட்சிகளுக்கு இடையே நேர்மையான மற்றும் விடாமுயற்சியுடன் உரையாடுவதன் வழியாக பாலஸ்தீனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகர்வோம்.

குழந்தை இயேசுவின் மீது என் கண்களை நிலைநிறுத்தி உக்ரைன் மக்கள் அமைதியைப் பெற வேண்டிக்கொள்கிறேன். துன்புறுத்தப்பட்ட மக்களுடன் நமது ஆன்மிக மற்றும் உடனிருப்பை நெருக்கத்தைப் புதுப்பிப்போம், நம் ஒவ்வொருவரின் ஆதரவின் வழியாக அவர்கள் கடவுள் அன்பின் உறுதியான தன்மையை உணரட்டும்.

கிறிஸ்து பிறப்பு குடிலிலிருந்து குழந்தை யேசு நம்மிடம் குரல் இல்லாதவர்களின் குரலாக இருக்க வேண்டும் என்று கேட்கின்றார். தண்ணீர் மற்றும் உணவுப் பற்றாக்குறையால் இறந்த அப்பாவிகளின் குரல், வேலை கிடைக்காதவர்கள் அல்லது வேலையை இழந்தவர்களின் குரல், மிகவும் சோர்வான பயணங்களில் தங்கள் உயிரைப் பணயம் வைத்தவர்களின் குரல், சிறந்த எதிர்காலத்தைத் தேடி சொந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்களின் குரலாக நாம் இருக்கக் கேட்கின்றார் பாலன் இயேசு.

சகோதர சகோதரிகளே, இன்னும் ஒரு வருடத்தில் கடவுளின் அருள் மற்றும் நம்பிக்கையின் நேரம் நெருங்கி வருகிறது என்பதை எடுத்துரைக்கும் யூபிலி ஆண்டு தொடங்க உள்ளது. இந்த தயாரிப்பு காலமானது போருக்கு "இல்லை" என்றும் அமைதிக்கு "ஆம்" என்றும் கூறும் வகையில் நமது இதயத்தை மாற்றுவதற்கான ஒரு வாய்ப்பாகும்; எசாயா இறைவாக்கினர் கூறியது போல், ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப் பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற் றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார்.

இந்த வார்த்தைகள் இன்று பெத்லகேமில் பிறந்த இயேசுவில் நிறைவேறியது. அவரை நம் உள்ளங்களில் வரவேற்போம். மீட்பரும், அமைதியின் இளவரசருமான அவருக்கு நம் இதயத்தைத் திறப்போம்!

இவ்வாறு தனது ஊர்பி எத் ஓர்பி எனப்படும் ஊருக்கும் உலகுக்குமான சிறப்பு செய்தியை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது சிறப்பு ஆசீரை அனைவருக்கும் வழங்கினார். அத்துடன் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்களையும் எடுத்துரைத்தார்.

**மெரினா ராஜ் - வத்திக்கான்**

## உங்கள் கூடாரங்களை விரிவாக்கம் செய்யுங்கள்'

உங்கள் மனம் பெரியதென்றால்
உலகம் சிறியதுதான்
உங்கள் சிந்தனை பெரியதென்றால்
விரிவானமும் சுருங்கியதுதான்..
இயற்கையைத் தாய் என்றால்
இறைவனும் உன் இதயத்தில் தான்!

ஒடுக்கப்பட்டவர்களுக்காக
ஒதுக்கப்பட்டவர்களுக்காக
தனிமையில் இருப்பவர்களுக்காக
போரில் சிக்கித் தவிப்பவர்களுக்காக
பசிப்பினியால் வாடுபவர்களுக்காக
அகதிகளுக்காக
உங்கள் கூடாரத்தில் இடம் தாருங்கள்..

உலக மீட்பர் இயேசு பாலனின் பிறப்புக்கு
மாடடைக்குடில் இடம் அளித்தது
வெறுமையான உங்கள்
மனக் கூடாரத்தில்
இனம் மதம் மொழி வேறுபாடின்றி
இடம் தருகையில்
இயேசு அங்கே தான் பிறக்கிறார்..

சுற்றி உள்ளவர்களை அரவணைத்து
இறை சமூகமாக வழி நடக்கையில்
அனைவரையும் ஏற்றுக்கொண்டு
ஒருவர் மற்றவருக்குச் செவி சாய்த்து
ஒருவர் ஒருவருக்கு உதவுகையில்
இறைமகன் இயேசு பிறக்கிறார்..

ஆலயங்களில் வீடுகளில்
அமைக்கப்பட்ட குடில்களை விட
நாம் விரிவுபடுத்தும் கூடாரங்களில்
இறைமகன் இயேசு பிறக்கிறார்!

**சத்யா பிரான்சிஸ், பினாங்கு**

# குளுவாங், புனித பிரகாசியார் பங்கில் கிறிஸ்மஸ் சிறுவர் விருந்து நிகழ்ச்சி

குளுவாங்: கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை முன்னிட்டு குளுவாங், புனித பிரகாசியார் ஆலயத்தில் சிறுவர் விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ், சீனம், ஆங்கிலம், மலாய் ஆகிய மொழி பேசும் பிள்ளைகள்,



பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர். விளையாட்டு போட்டிகள், உணவுகள் மற்றும் கிறிஸ்மஸ் தோத்திரப் பாடல் களையும் பாடி மகிழ்ந்தனர். சிறப்பு விருந்தினராக குளுவாங் நாடாளுமன்ற உறுப்பினர் புவான் வோங் சூ கி கலந்து கொண்டார். வருடா வருடம் கலந்து கொள்ளும் அவர், இம்மாதிரியான நிகழ்ச்சியில் பிள்ளைகளுடன் கலந்து கொள்வது மகிழ்ச்சியையும் அதே சமயத்தில் அனைத்து மக்களின் பரஸ்பர உறவையும் பாராட்டுகிறேன் என பாராட்டினார். சுமார் 250 பேர் கலந்து சிறப்பித்தனர். பங்கு அருட்பணியாளர்கள் Msgr பீட்டர் இங், மற்றும் அருட்பணியாளர் எட்ரியன் பிரான்சிஸ் அவர்களும் கலந்து கொண்டனர். துவக்க செபத்துடன் துவங்கிய கிறிஸ்மஸ் நிகழ்ச்சி முடிவில் கிறிஸ்மஸ் தாத்தா குதிரையில் வர குழந்தைகளுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி.

11.12.2023 அன்று காலை11.30 மணிக்கு துவங்கிய நிகழ்ச்சி மாலை 5.00 மணிக்கு இனிதே முடிவுற்றது. இந்நிகழ்ச்சியில், குளுவாங் மரியம் முதியோர் இல்ல துறவர சகோதரிகளும் கலந்து சிறப்பித்து ஆதரவு வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

*ஆவி. டேவிட், குளுவாங்*




# சிரம்பான் சிறைச்சாலையில் கிறிஸ்மஸ் திருப்பலி கொண்டாட்டம்

சிரம்பான்: கடந்த டிசம்பர் திங்கள் 13-ம் திகதி, காலை 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை, ஜெலுபு சிறைச்சாலையில் சிறப்பு திருப்பலியை இங்குள்ள மினவுதல் அன்னை பங்குத் தந்தை சேவியர் என்ரு அவர்கள் நிறைவேற்றினார்.



திருப்பலியில் அருள்பணி சேவியர் என்ரு

மற்றொரு நிகழ்ச்சியில், இதே சிரம்பான் சிறைச்சாலையில் அருள்பணி ஆல்பர்ட் ஆரோக்கியசாமி அவர்களும் அருள்பணி போனவெஞ்சர் இராயப்பன் அவர்களும் இணைந்து திருப்பலி கொண்டாடினர். இத்திருப்பலியில் 33 சிறைச்சாலை கைதிகள் பங்கேற்றனர் என்பது குறிப் பிடத்தக்கது. இவர்களில் 16 பேர் மியன்மார் மற்றும் 17 பேர் மலேசியாவைச் சேர்ந்தவர்கள்.



நற்கருணை வழங்கும் அருள்பணி ஆல்பர்ட்

திருப்பலிக்கு முன்னால் கத்தோலிக்கர் களுக்கு ஒப்புரவு திருச்சடங்கும் மற்றவர்களுக்கு அறிவுரை சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டது. வளைந்த துருபிடித்த ஆணியும் மணல் காகிதத்தால் தேய்க்கப்பட்டு, நேர் செய்யப்பட்டால், அது மீண்டும் பயன்படுத்தப்படக்கூடும் என்ற சிறு விளக்கம் உவமையாக அவர்கள் சிந்தனைக்கு வைக்கப்பட்டது.

நிறைவாக, கிறிஸ்மஸ் விருந்துபசரிப்பாக, பிரியாணி உணவும், பலகாரங்களும் குளிர்பானமும் வழங்கப்பட்டது என இந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர் சகோ. டேவிட் அல்லிமுத்து பகிர்ந்துகொண் டார்.

மூன்றாவதாக, மந்தின் சிறைச்சாலையில் அருள்பணி கிறிஸ்தபர் சூசைபிள்ளை



திருப்பலியில் அருள்பணி கிறிஸ்தபர்

அவர்கள் கிறிஸ்மஸ் திருப்பலியைக் கொண்டாடி அங்கிருந்த கிறிஸ்தவக் கைதிகளை மகிழ்வித்தார்.



*சகோ. ஜோர்ஜ் டிக்ருஸ், அருள்பணி ஆல்பர்ட் , அருள்பணி போனவெஞ்சர் மற்றும் சகோ. டேவிட் அல்லிமுத்து*

*செய்தி: டேவிட் & ஜோர்ஜ்*



**மக்கள் அமைதியை விரும்புவதால், நாம் அமைதிக்காக இறைவேண்டல் செய்வதுடன், அமைதிக்காக உழைப்போம்.**

# நம் அனைவருக்குமானவரை ஆராதிக்க வாரீர்!

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக மனுக்குலத்திற்கு குறிப்பாக வாகன-மோட்டிகளுக்கு மிகவும் நேர்த்தியான கண்டுபிடிப்பாக இருப்பது 'GPS' தடங்காட்டி. உலகத்தில் ஓரிடத்தைத் துல்லியமாக வானில் இருந்து அறியும் ஓர் கருவியும் திட்ட அமைப்பும்தான், தடங்காட்டி. ஆனால், அன்று விண்மீனின் துணைக்கொண்டே, உலக மீட்பரைத் தேடி வந்த மூன்று ஞானிகளின் திருவிழாவை இன்று கொண்டாடுகிறோம்.

இன்றைய முதல் வாசகம் (எசா.60:1-6), உலக மீட்பர் பிறப்பார் என இயேசு கிறிஸ்துவிற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பே இறைவாக்கு உரைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து விடுதலைப் பெற்று எருசலேமுக்குத் திரும்பிய இஸ்ராயேல் மக்களின் மகிழ்ச்சியை இந்த வாசகம் வெளிப்படுத்துகிறது. இந்த வெளிப்பாடு தாம் வாழும் காலத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது குறித்து, புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் (எபே.3:2-6) பெருமிதம் கொள்கிறார். இந்த இறைவெளிப்பாடு அனைத்துலகத்திற்குச் சொந்தமானது என பவுல் அடியார் குறிப்பிடுகிறார்.

அனைத்து மக்களுக்கும் உலக மீட்பர் சொந்தமானவர் என்பதைக் குறிக்கும் வகையில் யூதர்களைக் கடந்து, முதன்முதலாக ஆண்டவரைத் வணங்க புறவினத்தாரர்களான மூன்று ஞானிகள் வந்தனர். லூக்கா நற்செய்தியின்படி (2:15-16) மீட்பரை முதலில் கண்டவர்கள் இடையர்கள். ஆனால் இன்றைய மத்தேயு நற்செய்தி (2:1-12), இயேசு கிறிஸ்துவை முதலில் சென்று வணங்கியவர்கள் ஞானிகள் என கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் பிறப்புச் செய்தியில் புனித லூக்காவும் புனித மத்தேயுவும் வேறுபட்டிருந்தாலும் அவர்களின் அடிப் படை கருத்து ஒன்றே.

நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபட்டிருக்கிறோம். கிழக் கிலிருந்து வந்த ஞானிகளுக்கு விண்மீன் மூலம் கடவுள் வழிகாட்டினார். இன்று நமக்கு அந்த விண்மீன் வழிகாட்டி அல்ல. இன்று நமது வழிகாட்டி இயேசு கிறிஸ்துவே. அவரே உலகின் ஒளி (யோவா.8:12). ஏரோது அரசன், எருசலேம் மக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோர் தடைக்கற்களாக இருந்தாலும், ஆண்டவர் காட்டிய வழியில் (விண்மீன்) நடந்த சென்ற ஞானிகள் மீட்பரைக் கண்டு, மட்டில்லாப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். "நெடுஞ் சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள் (மத்.2:11).

இன்றைய திருவிழா, அனைவரும் அவருக் குச் சொந்தமான மக்கள். அவர் பார்வையில் பாகுபாடோ வேறுபாடோ இல்லை என்பதை எண்பிக்கிறது. பண்பாட்டு தோற்றத்திலும் புறத்தோற்றத் திலும், சமூக நிலைத்தோற்றத் திலும் நமக்கிடையில் வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. ஆனால் நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நமக்கு தந்தை ஒருவரே. திருக்காட்சி திருவிழாவின் முக்கிய கதாப்பாத்திரங்களாக இருப்பது மூன்று ஞானிகள் என்றாலும், அவர்களின் பாதைக்கு வழிகாட்டியாக இருந்த விண் மீன், அவர்களது இலட்சியப் பயணத்தின் விடிவெள்ளி. ஏழை-பணக்காரன், உயர்ந் தவன்-தாழ்ந்தவன், இருப்பவன்-இல்லாதவன், கற்றவன்-கல்லாதவன் என்ற பேதமின்றி, பிறந்திருக்கும் இயேசு பாலகன், நம் அனைவருக்கும் மீட்பர் என்பது நமது வாழ்வின் விடிவெள்ளி.

*அந்தோணி இன்னாசி, சைபர்ஜெயா, சிலாங்கூர்*

**ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசாயா 60: 1-6 |
| திரு.பாடல் | 72: 1-2.7-8.10-11.12-13 |
| 2-ம் வாசகம் | எபே 3: 2-3a, 5-6 |
| நற்செய்தி | மத்தேயு 2: 1-12 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- திருக்காட்சி**